**Cross**

**MCOP.No. 86/2019**

**Date:08.09.2025**

**ம.சா.1 பழனி**

**7 வது எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

இறந்து போன கார்த்திக்குமார் எனது மகன். எனக்கு இன்னொரு மகள் உண்டு. எனது மகன் கார் ஓட்டுநராக வேலை செய்து மாதம் ரூ.20,000 என்னிடம் கொடுத்து வந்தார். எனது மகனின் இருசக்கர வாகன ஓட்டுநர் உரிமம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை ஆனால் ஓட்டுநர் உரிமம் உள்ளது. இந்த விபத்து நடந்தது 13.02.2018 ஆண்டு. இந்த சமயத்தில் மோட்டார் வாகன சட்டம் பிரிவு 163 (ஏ) வழக்கு தாக்கல் செய்ய வேண்டும் என்றால் வேண்டும் என்றால் இறந்தவரின் மாத வருமானம் ரூ.40000 க்குள் இருக்க வேண்டும் என்றாலும் என்னுடைய மகனின் வருட வருமானம் ரூ.240000 க்கு மேல் உள்ளதால் மேற்படி பிரவின் கீழ் இழப்பீட்டு தொகைக்காக மனுதாக்கல் செய்ய முடியாது என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் எனது மகன் ஓட்டி சென்ற இருசக்கர வாகனம் அவருடய நண்பனுடையது. விபத்து சமயத்தில் எனது மகன் மேற்படி வாகனத்தினை இரவலாக வாங்கி ஓட்டி சென்றார் என்றால் சரிதான். விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரர் வாகனத்திற்கு 7 ம் எதிர்மனுதாரரிடம் எடுக்கப்பட்ட பாலிசி Liability பாலிசி என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த பாலிசியை பொறுத்து மனுதாரராகிய நானும், இறந்து போன கார்த்திக்குமாரும் 3ம் தரப்பினர் கிடையாது என்றால் சரியல்ல. இந்த விபத்து சம்மந்தமாக எனது மகனின் நண்பன் ஜோதிமுருகன் கொடுத்த புகாரில் தான் வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான்.

மேற்படி வழக்கில் எதிரியான எனது மகன் இறந்துவிட்டதால் குற்றவியல் வழக்கு மேல்நடத்த தேவையில்லை என்ற காரணத்திற்காக முடிக்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. குற்ற வழக்கு மேற்கண்டவாறு முடிக்கப்பட்டதை எதிர்த்து நான் சட்டநடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் சரிதான். என் மகனின் பிரேத பரிசோதனை அறிக்கையில் தலையில் ஏற்பட்ட காயத்தினால் தான் மரணம் ஏற்பட்டதாக மருத்துவ அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். விபத்தின் போது எனது மகன் தலைக்கவசம் அணியாமல் ஓட்டி சென்று ரோட்டின் ஓரமாக நின்ற தண்ணீர் தொட்டியில் மோதி இறந்து விட்டார் என்றால் சரியல்ல. விபத்திற்கு எனது மகன் தான் காரணம் என்பதாலும், 7ம் எதிர்மனுதாரரை பொறுத்து இறந்து போனவர் 3ம் தரப்பினர் கிடையாது என்பதாலும் இழப்பீடு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. 7ம் எதிர்மனுதாரரை பொறுத்து வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.